**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1–ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.2–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர் இல்லை . 17ம் பிரதிவாதி ஆஜர். 2 முதல் 9, 14, 16, 18, 19 பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி மற்றும் 17 முதல் 19, 5 பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர். 2, 3, 4, 20, 6 முதல் 9, 14, 16 பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர் இல்லை.)

அ.வ.எண்.932/2015

பி.வா.சா.2 சாந்தி (எ) கிருஷ்ணசாந்தி

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. சர்வே எண்.269/3ன் 0.35 செண்ட் பாகம் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி 1ம் பிரதிவாதி குடும்பத்தாரான வாரணவாசிகவுண்டர் வகையறாவிற்கு அ அட்டவணை சொத்தாக பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான்.

2. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை பார்த்து தான் நான் கிரயம் பெற்றேன். வாரணவாசிகவுண்டரும், சுப்ரமணியனும் சேர்ந்து ஒரு கிரய உடன்படிக்கை ஏற்படுத்திக்கொண்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும் அது 28.01.2009 தேதியில் ஏற்படுத்திக்கொண்டார்கள். அந்த கிரய உடன்படிக்கையை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. வாரணவாசிகவுண்டர் ரங்கசாமி பெயரில் பவர் பத்திரம் ஏற்படுத்திக்கொடுத்தார் என்றால் பெரியசாமி பெயரில் தான் ஏற்படுத்திக் கொடுத்தார். நான் கிரயம் பெற்றது வாரணவாசிகவுண்டர் ஒரு பெரியசாமி என்பவருக்கு பொதுஅதிகாரம் கொடுத்து அந்த பெரியசாமியிடமிருந்து நான் கிரயம் பெற்றேன்.

4. பெரியசாமியிடம் கிரயம் பெற்றது 65 செண்ட் ஆகும். 35 செண்ட் வடிவேலிடமிருந்து கிரயம் பெற்றோம். அந்த 35 செண்ட் வடிவேலுக்கு

எப்படி பாத்தியம் என்றால் சுப்ரமணி வடிவேல் பெயரில் பொது அதிகாரம் கொடுத்து கிரயம் பெறப்பட்டது.

5. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் பூர்வீக வகையில் பாத்தியப்பட்ட குடும்ப சொத்துக்களைத் தான் பாகப்பிரிவினை செய்துகொண்டதாக சொன்னால் சரிதான். வரணவாசிகவுண்டர் ரங்கசாமி பெயரில் ஏற்படுத்திக்கொடுத்த பொது அதிகார ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் அந்த ஆவணத்தை பற்றி எனக்கு தெரியாது.

6. சுப்ரமணி வடிவேல் பெயரில் பவர் பத்திரம் கொடுக்கப்பட்டுள்ளது அதில் சுப்ரமணிக்கு சொத்து எப்படி பாத்தியப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. கிரயம் வாங்கும் போது வரணவாசிகவுண்டருக்கு குடும்ப சொத்தா கூட்டுக்குடும்ப சொத்தா என்ற விவரங்களை கேட்டு தெரிந்துகொள்ளவில்லை.

வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.